# மேனிலை இரண்டாமாண்டு
# பொதுத் தமிழ்
## மாதிரி வினாத்தாள் – 1

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

## பகுதி – அ
### (செய்யுள், உரைநடை)

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6 x 1 = 6

1. "ஒன்றே யென்னின்….." எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம்

அ. அயோத்தியா காண்டம் ஆ. பால காண்டம்

இ. யுத்த காண்டம் ஈ. சுந்தர காண்டம்

2. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு – இக்குறட்பாவில் பயின்று வருவன

அ. அடி மோனை, அடி இயைபு ஆ. அடி எதுகை, சீர் இயைபு

இ. அடி மோனை, சீர் இயைபு ஈ. அடி எதுகை, சீர் எதுகை

3. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

www.Padasalai.Net

அ. 4 ஆ. 5

இ. 6 ஈ. 7

4. 'திவ்வியகவி' என்ற பெயரால் அழைக்கப்பட்டவர்

அ. குமரகுருபரர் ஆ. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

இ. ஒட்டக்கூத்தர் ஈ. புகழேந்தி

5. "ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப்பொங்கி வழிவதுதான் கவிதை" எனக் கூறியவர்

அ. கோலரிட்ஜ் ஆ. கீட்ஸ்

இ. ஜான்ரஸ்கின் ஈ. வோர்ட்ஸ் வொர்த்

6. செப்புத்திருமேனிகளின் பொற்காலம் எனச் சுட்டப்படுவது

அ. சேரர் காலம் ஆ. சோழர் காலம்

இ. பாண்டியர் காலம் ஈ. நாயக்கர் காலம்

II. (அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.) 3 x 2 = 6

7. "முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
கடிமகள் கதுப்பின் நாறி" – இவ்வடிகள் உணர்த்தும் செய்தி யாது?

8. வன்மையுள் வன்மை எது?

9. இராமன் குறிப்பால் உணர்ந்தவை யாவை?

10. "புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்" எனப் பாரதிதாசன் குறிப்பிடுவது ஏன்?

(ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 2 = 4

11. பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்குத் தரும் வரையறை யாது ?

12. "நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" – எப்போது?

13. மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள் யாவை?

III. (அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

14. வரதநஞ்சையப்பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகிறார்?

15. "கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்று புகலீர்"- இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

www.Padasalai.Net

16. பாலைத்திணை (அல்லது) பொருண்மொழிக்காஞ்சித் துறையை விளக்குக.

(ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

17. நாடகத்தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?

18. அறுமுறை வாழ்த்து – தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

19. செல்வம் நிலைபேறு உடையதன்று – என்பதை நாலடியார் எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?

IV. அ) நெடுவினா ( இருபது வரிகளில் விடை தருக.) 2 x 6 = 12

20. "அறிவுடைமை" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதை நிறுவுக.

(அல்லது)

அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரையில் காணப்படும் நாட்டுப்பற்றினைத் தொகுத்தெழுதுக.

21. இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாகப் பாடப்பகுதியில் வரும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

கவிதை இன்னது என்று பேராசிரியர் வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் விரித்தெழுதுக.

(ஆ) அடிபிறழாமல் எழுதுக 4 + 2 = 6

22. (அ) "வெல்லை….. " எனத்தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

(ஆ) "……. தொழில்" என முடியும் திருக்குறள்

பகுதி – ஆ

(இலக்கணம், துணைப்பாடம், மொழிப் பயிற்சி)

V. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.) 8 x 1 = 8

23. அகல்முகில் உருக்கொடு – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ. பண்புத் தொகை ஆ. வினைத்தொகை

இ. உவமைத்தொகை ஈ. இலக்கணப்போலி

24. 'சட்டை' என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ. புதுமைப்பித்தன் ஆ. ஜெயகாந்தன்

இ. அய்க்கண் ஈ. கந்தர்வன்

25."உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதி பயின்று வரும் சொல்

அ. தென்கரை ஆ. கற்கொடி

இ. அறனல்ல ஈ. தினந்தினம்

26."நமஸ்காரம்" – இச்சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லைத் தேர்க.

அ. வழிபாடு ஆ. வாழ்க்கை

இ. வணக்கம் ஈ. வாழ்த்து

27. பொருந்தாத இணையைத் தேர்க.

அ. வேலி – இராஜம்கிருஷ்ணன் ஆ. மகன் – பா. செயப்பிரகாசம்

இ. கிழிசல் – அய்க்கண் ஈ. பழிக்குப்பழி – த. நா. சேனாதிபதி

28. விக்கி விக்கி அழுதவர்கள் – அடிக்கோட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ. இரட்டைக் கிளவி ஆ. அடுக்குத் தொடர்

இ. உரிச்சொற்றொடர் ஈ. வினையெச்சம்

www.Padasalai.Net

29. பால்வண்ணம் பிள்ளை எனும் சிறுகதையின் மூலம் நாம் அறிந்துகொள்வது

அ. ஒற்றுமையே வலிமை ஆ. சிறுதுளி பெருவெள்ளம்

இ. சிறு குடும்பம் சீரான வாழ்வு ஈ. பேராசை பெரு நட்டம்

30. அலை, அளை இச்சொற்களுக்குரிய பொருளறிந்து தேர்க.

அ. கடலலை, அலைதல் ஆ. புற்று, திரிதல்

இ. அலைதல், புற்று ஈ. கூப்பிடுதல், புற்று

VI . குறுவினா (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக) 7 x 2 = 14

31. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

அ. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது

ஆ. வெண்ணிலா கலக்கலவென்றுச் சிரித்தாள்

32. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ. மக்கள் கிடையாது

ஆ. மதுரை என்ற நகரம்

33. கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக.

அ. கொடுத்த சேதியை முழுசா பேசு

ஆ. ஒனக்கு புடிச்சத சாப்புடு

34. பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களை எழுதுக.

அ. Smart phone ஆ. Whatsapp இ. குமாஸ்தா ஈ. மாமூல்

35. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ. இளந்தேங்காய், முற்றிய தேங்காய் இரண்டும் தென்னை மரத்திலிருந்து விழுந்தன

ஆ. மயில் கூவ குயில் கத்தியது

36. அரண், அறன் – பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க.

37. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக .

அ. உனக்கில்லை ஆ. பச்சிலை

38. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ. நோக்கி ஆ. மறவற்க

39. பகுபத உறுப்புகள் யாவை?

www.Padasalai.Net

VII எவையேனும் மூன்றனுக்கு விடை தருக (மொழித்திறன் பயிற்சிகள்) 3 x 4 = 12

40. உவமையணி (அல்லது) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

41. தமிழாக்கம் தருக.

அ. Think before you speak

ஆ. Face is the index of the mind

இ. Indian people always dislike violence

ஈ. Work more talk less.

42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.

வாணிகர்தம் முகவரியை வரைகின்ற
பலகையிலே ஆங்கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால் வரைக, என
அன்னவர்க்குச் சொல்ல வேண்டும்!
ஆணிவிற்போன் முதலாக அணிவிற்போன்
ஈறாக அனைவர் போக்கும்
நாணமற்ற தல்லாமல் நற்றமிழின்
நலம் காக்கும் செய்கையாமோ?

- பாரதிதாசன்

43. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

பருவத்தே பயிர்செய் (அல்லது) சிறுதுளி பெருவெள்ளம்.

VIII பின்வரும் துணைப்பாடப்பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.

1 x 6 = 6

44. “சட்டை” என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

( அல்லது)

“ஓர் உல்லாசப் பயணம்” – இச்சிறுகதையின் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக வரைக.

www.Padasalai.Net

மேனிலை இரண்டாமாண்டு

பொதுத் தமிழ்

மாதிரி வினாத்தாள் – 2

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

பகுதி – அ

(செய்யுள், உரைநடை)

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6 x 1 = 6

1. பொருந்திய விடை தேர்க.

| ஆசிரியர் | | பாடல் தலைப்பு |
|---|---|---|
| 1. பாரதிதாசன் | - | காடு |
| 2. சுரதா | - | புத்தகசாலை |
| 3. தாராபாரதி | - | சிக்கனம் |
| 4 . வாணிதாசன் | - | வேலைகளல்ல வேள்விகளே |

அ)1 2 3 4 ஆ) 2 1 3 4 இ) 4 1 2 3 ஈ) 3 2 1 4

2. 'செம்பொற்கொடி அனையாள்' எனக் குறிப்பிடப்படுவள்

அ) சீதை ஆ) கண்ணகி இ) மணிமேகலை ஈ) மந்தரை

www.Padasalai.Net

3. அகநானூற்றுப் பாடல்களின் பகுப்புமுறையில் பொருந்தாத இணையைக் கண்டறிக.

| | திணை | | பாடல்கள் |
|---|---|---|---|
| அ) | குறிஞ்சி | - | 1,3 ….. |
| ஆ) | முல்லை | - | 4, 14 ….. |
| இ) | மருதம் | - | 6,16 …… |
| ஈ) | நெய்தல் | - | 10, 20 …. |

4. கொடுந்தமிழ் நாட்டிலுள்ள நாடுகளின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 10 இ) 11 ஈ) 12

5. "உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்" எனக் குறிப்பிடும் நூல்.

அ) நற்றிணை ஆ) கலித்தொகை இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

6. உரைநடை ஆசிரியர்கள் அடிப்படையில் மாறியிருப்பவரைக் கண்டறிக.

அ) திரு.வி.க. ஆ) மறைமலையடிகள் இ) மு.வ ஈ) இளவழகனார்

II. (அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக) 3 x 2 = 6

7. நாமக்கல் கவிஞர் பெற்ற சிறப்புகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

8. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?

9. அந்தாதி – பெயர்க்காரணம் தருக.

10. " அறிவர்தம் அறிவர்க்கும் அறிவா" – இடம் சுட்டுக.

(ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 2 = 4

11. கவிதை என்பதற்குக் கீட்ஸ் தரும் விளக்கம் யாது?

12. "எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி" எனக் கூறும் நூல் எது? இத்தொடர் எதைப்பற்றிக் கூறுகிறது?

13. 'ஜல்லிக்கட்டு' என்பது சங்க காலத்தில் எப்பெயரால் வழங்கப்பட்டது?

III. (அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

14. ஒறுத்தார், பொறுத்தார் குறித்துக் குறள் கூறுவன யாவை?

15. குறிஞ்சித்திணை (அல்லது) நற்றாய் கூற்று துறையை விளக்குக.

www.Padasalai.Net

16. "நீய டாவெதிர் நிற்பதோ" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

(ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

17. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?

18. 'கற்களை அடுக்கி அமைக்கப்பட்ட கோவில்கள் மூலம் தமிழரின் கட்டடக்கலை அறிவு புலப்படுகிறது' – இக்கூற்றை விளக்குக.

19. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ காட்டும் வழிகள் தற்காலத்திற்கும் ஏற்புடையதா? விளக்குக.

V . அ.) நெடுவினா( இருபது வரிகளில் விடை தருக.) 2 x 6 = 12

20. குழந்தைத் தொழிலாளர் அவலநிலை குறித்துக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

சீதையைக் கண்டுவந்து அனுமன் கூறிய செய்திகள் வாயிலாக, அவன் 'சொல்லின் செல்வன்' என்பதை நிறுவுக.

21. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றித் தொகுத்து எழுதுக.

(அல்லது)

நீதி கூறும் முறைமையில் திருவள்ளுவர் 'நயம்பட உரைப்பவர்' என்பதைச் சான்றுகளுடன் மெய்ப்பிக்க.

**ஆ) அடி பிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

22. அ. "மனிதரெல்லாம்..." எனத் தொடங்கும் பாடல்.

ஆ. "...அறிவு" என முடியும் திருக்குறள்.

**பகுதி – ஆ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)**

V. **<u>பலவுள் தெரிக.</u>** 8 x 1 = 8

23. 'வேலி' என்னும் சிறுகதையின் அடிப்படையில் பொருந்தாதவர்

அ) மாலதி ஆ) கோமதி இ) வானதி ஈ) செண்பகம்

24. 'கண்டனன்' – இச்சொல்லிற்குரிய சரியான பகுபதப் பிரிப்பு முறையைத் தேர்க.

அ)கண் + ட + ன + ன் ஆ) காண் (கண்) + ட் + ன் + ன்

இ) காண் (கண்) + ட் + அன் + அன் ஈ) கண் (காண்) + ட் + அன்

www.Padasalai.Net

25. Plastic – என்னும் சொல்லிற்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க.

அ)வழுவழுப்பு ஆ) நெகிழி இ) நெளிவு ஈ) வழலை

26. <u>வல்விரைந்து</u> பூட்டி – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) அடுக்குத்தொடர் ஆ) உரிச்சொற்றொடர்

இ) வியங்கோள் வினைமுற்று ஈ) வினையெச்சம்

27. பொருந்தாத இணையைக் கண்டறிக.

| **<u>சிறுகதை</u>** | | **<u>கதைமாந்தர்</u>** |
|---|---|---|
| அ) சட்டை | - | கோயில் குருக்கள் |
| ஆ) பால்வண்ணம் பிள்ளை | - | மேலவீட்டு அண்ணாச்சி |
| இ) பழிக்குப்பழி | - | மோகன் |
| ஈ) மண் | - | கோவிராஜ் |

28. 'கிழிசல்' என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ) வல்லிக் கண்ணன் ஆ) நாஞ்சில் நாடன்

இ) இராஜம் கிருஷ்ணன் ஈ) ஜெயகாந்தன்

29. மதிவிளக்கு என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) வேற்றுமைத்தொகை ஈ) உம்மைத் தொகை

30. 'நபர்' என்னும் சொல் எம்மொழிச் சொல் எனக் கண்டறிக.

அ) பாரசீகம் ஆ) அரபி இ) வடமொழி ஈ) தமிழ்

VI. குறுவினா (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக) 7 x 2 =14

31. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

அ. களையாத ஆ. விடுவார்

32. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ. முன்னரண் ஆ. பூஞ்சோலை

33. சொல் விரிவாக்கம் தருக.

www.Padasalai.Net

அ. இ.கா.ப. ஆ. த.நா.மி.வா.

34. வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

அ. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.

ஆ. வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்றுச் சஞ்சீவிபர்வதச் சாரல் பாடுகிறது.

35. கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக.

அ. நஞ்சையும் புஞ்சையும் காஞ்சிப்போயின.

ஆ. நேரத்தோடு வராட்டி பாட்டி திட்டும்.

36. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே

ஆ. இடதுபக்கம் செல்லாதே.

37. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ. தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்.

ஆ. கரும்புத் தோப்புக்குச் சென்றேன்.

38. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.

அ. நாஷ்டா சாப்பிட்டு துட்டுக் கொடுத்தேன்.

ஆ.ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.

39. ஏற்ற இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.

எல்லாரும் இந்நாட்டு மக்கள் எல்லாருக்கும் தமிழ்மொழி உரியது எல்லா ஊர்களும் ஓர் ஊர் போன்றனவே என்னும் ஒற்றுமை உணர்வு தமிழர்களிடம் மேலோங்கியிருந்தது.

VII எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. (மொழித்திறன் பயிற்சிகள்) 3 x 4 = 12

40. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின் மேல்வெற்றி எமக்கெய்த வேண்டும்.

-தேசிக விநாயகம் பிள்ளை.

41. பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கேற்ற விடை தருக.

இயல், இசை, நாடகம் என மூவகையில் அமையும் முத்தமிழில் கடைசியாக அமைவது நாடகம். நாடகத்தைப் "பாமர மக்களின் பல்கலைக்கழகம்" என்பர். நாடக வேந்தர் டி.கே. சண்முகம் அவர்கள், பார்த்தும் கேட்டும் மகிழத்தக்கது நாடகம் என்பார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்தைக் கூத்து என்றும் நடிகர்களைக் கூத்தாடி என்றும் அழைத்தனர். சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களுள் கூத்தராற்றுப்படையும் ஒன்றாகும். மேலும் திருக்குறள் "கூத்தாட்டவைக் குழாத்தற்றே" என நாடகம் நடைபெறும் இடத்தைக் கூத்தாட்டவை என்றே குறிப்பிடுகிறது.

<u>வினாக்கள்</u>

www.Padasalai.Net

1. நாடக வேந்தர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. முத்தமிழ் – இலக்கணக் குறிப்பு தருக.
3. நாடக அமைப்பு முறையை முதலில் கூறிய நூல் எது?
4. நாடக அரங்கைத் திருக்குறள் எப்பெயரால் சுட்டுகிறது?

42. சொற்பொருள் பின்வருநிலையணி (அல்லது) எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

43. மழை (அல்லது) சுற்றுச்சூழல் – என்னும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதையொன்று இயற்றுக.

VIII பின்வரும் துணைப்பாடப்பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 1 x 6 = 6

44. 'மண்' என்னும் சிறுகதையினைத் தாங்கிப் பிடிக்கும் மையப்புள்ளி 'இராமாயி' – இக்கூற்றினை மெய்ப்பிக்க.

(அல்லது)

'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' – என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

www.Padasalai.Net

மேனிலை இரண்டாமாண்டு

பொதுத் தமிழ்

மாதிரி வினாத்தாள் – 3

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

பகுதி – அ

(செய்யுள், உரைநடை)

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6 x 1 = 6

1. கம்பர் பிறந்த ஊர்

அ. திருவழுந்தூர் ஆ. மோகனூர் இ. திருவாதவூர் ஈ. ஓதலூர்

2. மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களில் எண்ணிக்கை

அ. 120 ஆ. 200 இ. 100 ஈ. 180

3. திரைகவுள், தண்குடை ஆகியவற்றின் இலக்கணக் குறிப்பு

அ. பண்புத்தொகை, வினைத்தொகை ஆ. வினையெச்சம் , பண்புத்தொகை

இ. வினைத்தொகை, உம்மைத்தொகை ஈ. வினைத்தொகை, பண்புத்தொகை

4. சரியான இணையைத் தேர்க.

| புலவர்கள் | | இயற்றிய நூல்கள் |
|---|---|---|
| அ) இளங்கோவடிகள் | - | மணிமேகலை |
| ஆ) திருத்தக்கதேவர் | - | சிலப்பதிகாரம் |
| இ) நாதகுத்தனார் | - | குண்டலகேசி |
| ஈ) சீத்தலைச் சாத்தனார் | - | சீவக சிந்தாமணி |

www.Padasalai.Net

5. “வாங்கிய ஆழி தன்னை வஞ்சர் ஊர் வந்த தாமென்

றாங்குயர் மழைக்கண்ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி” இவ்வடியில் பயின்று வரும் ஆழி எனும் சொல்லிற்கான இரு பொருள்

அ. கடல், சக்கரம் ஆ. கடல், மோதிரம் இ. மோதிரம், தேர் ஈ. ஆழம், வளம்

6. அன்னத்தின் தோழி

அ. நீலி ஆ. கண்ணுக்கினியாள் இ. வீராயி ஈ. பூங்கொடி

II. அ. குறுவினா(எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக) 3 x 2 = 6

7. கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?

8. அகநானூற்றுப் பாக்களின் திணை அமைப்பு முறையை விளக்குக.

9. ‘ வையமும் வானகமும் ஒப்பாகா – எதற்கு ?

10. தவம் செய்த தவமாம் தையல் – யார்? யார் கூற்று?

ஆ) குறுவினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 2 = 4

11. தமிழ் உயர்மொழி என உரைக்கப்படக் காரணம் யாது?

12. மனிதன் சமரசத்தைப் பற்றிப் பேசுவதிலும் அதை நடைமுறைக்குக் கொணர்வதே அறிவுடைமை என்பதை நிறுவுக.

13. அறுமுறை வாழ்த்து – விளக்குக.

III. அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

14. கம்பர், ‘நன்றே நம்பி குடிவாழ்க்கை’ என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

15. வினைத்திட்பத்தின் சிறப்பும் அஃதுடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக.

16. பொதுவியல் திணை (அல்லது) புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது – துறையைச் சான்றுதந்து விளக்குக.

ஆ) சிறுவினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 4 = 8

17. தமிழ்மொழி தனித்தியங்கும் தன்மையுடையது – எங்ஙனம்?

18. இராமலிங்க அடிகளார் சமரசம் வேண்டி உரைப்பது யாங்ஙனம்?

www.Padasalai.Net

19. மக்கட்பிறவி மேன்மையுடையது - எவ்வாறு?

IV. அ) நெடுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக) 2 x 6 = 12

20. செய்ந்நன்றியறிதல் குறித்து வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

மறப்பரிது நும் நன்றி – என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சி உரைகள் யாவை ?

21. பேராசிரியர் வையாபுரியார் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?

(அல்லது)

மனித வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக இருக்க வேண்டியவை குறித்து மு.வ.உரைப்பன யாவை?

ஆ) அடி பிறழாமல் எழுதுக. 4+2 = 6

22. அ. ‘இந்திய நாடிது ..........’ எனத் தொடங்கும் நாட்டு வாழ்த்துப் பாடல்

ஆ. ‘……….........தொழில்’ என முடியும் திருக்குறள்

பகுதி – ஆ

(இலக்கணம், துணைப்பாடம், மொழிப் பயிற்சி)

V. பலவுள் தெரிக .(அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.) 8 x 1 = 8

23. சரியான இணையைத் தேர்வு செய்க.

(அ). திண்மை + திறல் – திண்டிறல்

(ஆ). திண் + திறல் – திண்டிறல்

(இ). திண் + டிறல் – திண்டிறல்

(ஈ). திண்ண் + திறல் – திண்டிறல்

24. ஷேமம் - பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.

(அ). அழகு

(ஆ). நலம்

(இ). வாழ்த்து

(ஈ). அன்பு

25. தருகுவென் என்னும் சொல்லின் பொருத்தமான பகுபதப் பிரிப்பு முறையைத் தேர்க.

(அ). தா + கு + வ் + என்.

(ஆ) தரு + கு + வ் + என்.

(இ) தருகு + வென்.

(ஈ) தருகு + வ் + என்.

26. திருத்தமான மரபுச் சொல்லை த் தேர்ந்தெடுக்க.

(அ) யானை ஊளையிட்டது.

(ஆ) யானை முழங்கியது.

(இ) யானை பிளிறியது.

(ஈ) யானை எக்காளமிட்டது.

27. வேலி என்னும் சிறுகதையை எழுதியவர்.

(அ) ராஜம் கிருஷ்ணன்.

(ஆ) வல்லிக்கண்ணன்.

(இ) ஜெயகாந்தன்

(ஈ) கந்தர்வன்.

www.Padasalai.Net

28. வல்லெழுத்து மிக்குள்ள சரியான சொற்றொடரைக் கண்டறிக.

(அ) எதையும் எழுதி பழகவேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.

(ஆ) எதையும் எழுதிப் பழகவேண்டும் என்று எனக்குச் சொன்னார் ஆசிரியர்.

(இ) எதையும் எழுதிப் பழகவேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.

(ஈ) எதையும் எழுதி பழகவேண்டும் என்று எனக்குச் சொன்னார் ஆசிரியர்.

29. செறுவார் என்பதன் பொருள்.

(அ) நண்பர்.

(ஆ) தந்தை.

(இ) பகைவர்.

(ஈ) தாய்.

30. குறிப்பினால் உணரும் கொள்கையான்.

(அ) அனுமன்.

(ஆ) இராமன்.

(இ) சீதை.

(ஈ)இராவணன்.

www.Padasalai.Net

VI. குறுவினா(எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக) 7 x 2 = 14

31. பலாப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, இளந்தேங்காய் ஆகியவற்றிற்கான மரபுச் சொற்களைத் தருக.

32. பின்வரும் தொடர்களைச் சேர்த்தெழுதியும், பிரித்தெழுதியும் இருபொருள் தருக.

(அ) இரும்படியும் ( ஆ) பலகைத் தொழில்.

33. உவமை அணி என்றால் என்ன?

34. தமிழாக்கம் தருக.

1) Art is long life is short.
2) Delay is dangerous.

35. ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக.

(அ) அவியா (ஆ) வைவேல்.

36. ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) மணந்த (ஆ) வாழ்த்துவம்

37. அலை , அளை, அழை பொருள் வேறுபாடறிந்து சொற்றொடர் அமைக்க.

38. ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

(அ). கருத்தோடிசைத்த

(ஆ) தினந்தினம்

39. முத்தமிழ் – தொகைச்சொல்லை விரித்தெழுதுக.

VII நெடுவினா(எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக) 3 x 4 = 12

40. பழமொழியை விளக்கி, வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

சிறு துளி பெருவெள்ளம்

(அல்லது)

செந்தமிழ் என்னும் தலைப்பில் கவி புனைக.

41. தற்குறிப்பேற்ற அணி அல்லது எடுத்துக்காட்டு உவமை அணியை விளக்குக.

42. கீழ்க்காணும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு விடை தருக.

பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்கிக் கூறுகின்றன. பாட்டியல் நூல்களுள் வச்சணந்திமாலை குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நூலாகும். வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி முதலியவை சிற்றிலக்கியங்களுள் சிறப்பானவைகளாகக் கருதப்பெறுகின்றன.

www.Padasalai.Net

**வினாக்கள்.**

(அ) சிற்றிலக்கியங்கள் மொத்தம் எத்தனை?

(ஆ) வீரமாமுனிவர் இயற்றிய அகராதியின் பெயர் என்ன?

(இ) சிற்றிலக்கிய நூல்கள் சிலவற்றைக் கூறுக.

(ஈ) பாட்டியல் பிரபந்தம் என்னும் வடசொல் உணர்த்தும் பொருள் யாது?

43. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்து எழுதுக.

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறம் என்னும் தமிழ்நாடு வாழ்க!

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்.

**VIII. பின்வரும் துனைப்பாடப் பகுதி வினாவிற்கு இருபக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.** 1 x 6 = 6

www.Padasalai.Net

பால்வண்ணம் பிள்ளை கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் விளக்கி வரைக .

(அல்லது)

'மண்' என்னும் சிறுகதையில் நும்மைக் கவர்ந்த கதைமாந்தர் யார்? அவர் எவ்வகையில் அதற்குப் பொருத்தமானவர் என்பதை நிறுவுக.